# மாணவர்களின் மனம் கவர்ந்த சமச்சீர் கல்வி!





அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி! இப்படி ஓர் உன்னதமான முயற்சியை எந்தக் கட்சியும் நினைத்துக்கூட பார்த்திராத போது, திராவிட முன்னேற்றக் கழகம். மிகத் துணிச்சலாக அந்த இலக்கை 2006-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், தனது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியாக அளித்தது.

**நர்சரி, மெட்ரிகுலேசன், ஆங்கிலோ -இந்தியன், ஓரியண்டல், மாநில வாரியக் கல்வி ஆகிய பல்வேறு கல்வி முறைகளை ஆய்வு செய்து அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதுதான் 'சமச்சீர் கல்வித் திட்டத்'தின் முக்கிய நோக்கம்.**

எல்லாவற்றிலும் சமத்துவம், அனைவருக்கும் சம உரிமை என்று பேசப்படும் இந்தக் காலகட்டத்தில் கல்வியிலும் சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பது தி.மு.க.வின் நிலை மட்டுமல்ல, தமிழ்நாட்டுக் கல்வியாளர்கள் பலரின் கருத்தும் அதுதான். அதனை எடுத்த எடுப்பிலேயே தான்தோன்றித்தனமாக அறிவித்துவிடவில்லை என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்தத் திட்டம் கடந்து வந்த சோதனைகளும், தாண்டி வந்த தடைகளும் ஏராளம்.

2006-ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தவுடனேயே சமச்சீர் கல்வித் திட்டத்தைத் தனது முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சட்டம் இயற்றி அறிவித்துவிடவில்லை நமது கழகம். இந்தத் திட்டம் பற்றி அரசுக்குப் பரிந்துரைகளைத் தருவதற்காக 2006-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் தேதி பாரதிதாசன் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் எஸ்.முத்துக்குமரன் தலைமையில் கல்வியாளர்களைக் கொண்ட ஒரு குழுவினை அரசு அமைத்தது. அந்தக் குழு இதைப் பற்றி நன்கு ஆய்வு செய்து தனது அறிக்கையை அரசின் பரிசீலனைக்கு 2007-ஆம் ஆண்டு ஜூலை 4-ஆம் தேதி அளித்தது.

அந்தப் பரிசீலனைகளை அரசு அப்படியே ஏற்றுக் கொண்டுவிடவில்லை. அந்தக் குழுவின் பரிந்துரைகளை மீண்டும் ஆய்வுசெய்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்க ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி எம்.பி. விஜயகுமார் அவர்களை ஒரு நபர் குழுவாக அரசு நியமித்தது. அதன்படி, அவரும் தனது ஆலோசனைகளை வழங்கினார்.

அதன் பிறகு, தமிழ்நாட்டில் சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆய்ந்து பரிசீலிக்க, பிற மாநிலங்களில் நடைமுறையில் இருக்கும் பாடத்திட்டங்கள், தேர்வு முறைகள் ஆகியவற்றைக் குறித்து ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க அதிகாரிகளையும் கல்வியாளர்களையும் கொண்ட குழு ஒன்று அரசால் 2008-ஆம் ஆண்டு அக்டோபர் 30-ஆம் தேதி அமைக்கப்பட்டது. அந்தக் குழு கர்நாடகா. குஜராத், கேரளா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து அறிக்கையை அளித்தது.

இவ்வாறு பலகட்ட பரிசீலனைகளை மேற்கொண்டு, சுமார் நான்கு ஆண்டுகள் கழித்து, 2010-ஆம் ஆண்டில் சமச்சீர் கல்வித் திட்டத்தை, தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக அதற்கான சட்டத்தை 2010-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதி சட்டப் பேரவையில் கழக அரசு இயற்றியது.

சட்டம் இயற்றப்பட்ட பிறகும், அன்றைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தலைமையில் 2010-ஆம் ஆண்டு மார்ச் 1-ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் கல்வியாளர்களின் அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, சமச்சீர் கல்வித் திட்டத்தை 2010-2011 கல்வி ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டன.

**அதன்படி, சமச்சீர் கல்வி முறையை இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தலாம் என்றும், முதற்கட்டமாக 2010-2011 ஆம் கல்வி ஆண்டில் ஒன்றாம் வகுப்பு மற்றும் 6ஆம் வகுப்புக்கும், பிறகு 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் இதர வகுப்புகளுக்கும் நடைமுறைப்படுத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது!**

தொடர்ந்து, 2010-2011 ஆம் கல்வி ஆண்டில் முதல் மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கு பாடத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டு, பாடப் புத்தகங்கள் தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு பாடநூல் கழகத்தால் அச்சிடப்பட்டு, மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

அதுபோலவே, அரசின் கொள்கை முடிவின்படி, 2011-2012 ஆம் கல்வி ஆண்டு முதல் சமச்சீர் கல்வி முறையை எஞ்சிய 2, 3,4, 5, 6, 7, 8, 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்கள் 200 கோடி ரூபாய் செலவில் அச்சிடப்பட்டு, அனுப்பப்பட்டன. **நம் கழக அரசு வெளியிட்ட சமச்சீர் கல்வி பாட நூல்கள் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில் பெரும் பாராட்டுகளைப்பெற்றன. இந்நிலையில், 2011 -ஆம் ஆண்டு மே மாத மத்தியில், தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.**

கழகம் ஆட்சியில் இருந்தபோதே. சமச்சீர் கல்விச் சட்டத்தைத் தள்ளுபடி செய்யக் கோரி ஒரு சில தனியார் பள்ளிகள் மற்றும் சங்கத்தினரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. அந்த வழக்குகளின் மீது. 2010-ஆம் ஆண்டு ஏப்ரல் 30 அன்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், தமிழ்நாடு அரசு பிறப்பித்த சட்டம் செல்லும் என்று சொல்லப்பட்டது.

தொடர்ந்து, சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை வழங்கக் கோரி, உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டன.

இந்நிலையில், இந்தத் திட்டம் குறித்து அ.தி.மு.க. அரசு திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. அதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அந்தச் சட்டத்தை ரத்து செய்ய உத்தரவிடப்பட்டது. மேலும் நீதிமன்றம் தனது தீர்ப்பில், **"சமச்சீர் கல்விச் சட்டத்தின் நோக்கம் மிகத் தெளிவானது. சிறந்த வல்லுநர்களைக் கொண்ட ஆய்வுக் குழு விரிவாக ஆராய்ந்து சமச்சீர் கல்வி முறையை அமல்படுத்த பரிந்துரை செய்துள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை எளிதாகப் புற க்கணித்துவிட முடியாது"** என்று நம் கழகம் கொண்டு வந்த திட்டத்தை அங்கீகரித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் அ.தி.மு.க. அரசு மேல் முறையீடு செய்தபோது, அந்தத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதிக்க முடியாது என்றும், சமச்சீர் கல்வி பாடத் திட்டத்தில் குறைபாடுகள் இருப்பின், அதுகுறித்து ஆராய நிபுணர் குழு நியமிக்கப்பட வேண்டும் என்றும், அந்தக் குழுவின் அறிக்கையை சென்னை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கூறியது. தொடர்ந்து. அ.தி.மு.க. அரசு அமைத்த அந்த நிபுணர் குழுவில், சமச்சீர் கல்விக்கு எதிரானவர்களே இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற விமர்சனம் வந்தது. ஆனாலும், அந்தக் குழு தனது அறிக்கையை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

அதை விசாரித்த உயர்நீதிமன்றம், தனது தீர்ப்பில், **"மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுவிட்ட நிலையில், சமச்சீர் கல்விச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவருவது, மாணவர்களின் நலனைப் பாதிக்கும். எனவே தமிழ்நாடு அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தம் செல்லாது. அதை ரத்து செய்கிறோம்"** என்று கூறியது.

இவ்வாறு நீதிமன்றங்களின் கண்டிப்புக்குப் பிறகு, அ.தி.மு.க அரசு சமச்சீர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று சொன்னது. 'கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற கதையாக, சமச்சீர் கல்வி பாட நூல்களில் இடம் பெற்றிருந்த திருவள்ளுவர் படம் உட்படப் பல பகுதிகளை ஸ்டிக்கர் ஒட்டி மறைத்தும். கறுப்பு நிற மார்க்கர் பேனா கொண்டு அடித்தும் புத்தகங்களை வழங்கியது அம்மையாரின் அரசு. அம்மையாரின் சர்வாதிகாரப் போக்குக் காரணமாக, 2011 -2012 ஆம் கல்வி ஆண்டில் மாணவர்கள் முதல் மூன்று மாதங்களைக் குழப்பத்திலேயே கழித்தார்கள்.

**கல்வியில் சமத்துவம் என்பது நீண்ட நெடிய போராட்டத்தைக் கொண்டது என்பதற்கு நிகழ்கால சாட்சி, சமச்சீர் கல்வித் திட்டம்.**